உ

பரம்பிரஹ்மணே நம:

இராமநாதபுரம் ஜில்லா

கட்டுக்குடிப்பட்டி

# மு. வெ. நல்லசாமிதாஸ்

அவர்களியற்றிய

# பக்திரசக் கீர்த்தனம்.

பிரசுரகர்த்தர்:

ஸ்ரீ காமாக்ஷி விலாஸ் புத்தகசாலை

வேப்பேரி போஸ்டு - சென்னை.

ரிஜிஸ்டர் காபிரைட்

விலை அணா 5.

SCANNED
SCANNED
Q2:417x
N28
58972

உ

சிவமயம்.

ஓம் பரப்பிரஹ்மணே நம:

இராமநாதபுரம் ஜில்லா கட்டுக்குடிப்பட்டி

மு. வெ. நல்லசாமிதாஸ் இயற்றிய

# தெய்வரஞ்சித பஜனும்ருதம்

என்னும்

# பக்திரசக் கீர்த்தனம்.

பிரசுரகர்த்தர்

ஸ்ரீகாமாக்ஷி விலாஸ் புஸ்தகசாலையார்

வேப்பேரி போஸ்டு, சென்னை.

ரெஜிஸ்தர் செய்தது.

Printed at
"MARAN" Press; Vepery, Madras.

உ

சிவமயம்.

# முகவுரை.

---

பிழைபொருத்தல் பெரியோர்கடன்
குற்றம்பொருத்தல் குணமுள்ளோர்கடன்.

அடியேனும் ஒரு புலவனென எண்ணி இறுமாப்புக் கொண்டது எவ்வாறிருக்கிறதெனின், விண்மதிக்குச் சமமென்று மின்மினிப்பூச்சி எண்ணிய எண்ணம்போலாம். என்றாலும், அடியேன் இயற்றிய பக்திரசக் கீர்த்தனமென்னும் இந்நூலை தங்கள் தங்கள் மழலைச் சொல்லைக்கேட்டு மகிழுங்குணப் பெற்றோர்போல் அகமகிழ்ந்து அங்கீகரித்து குற்றத்தை மன்னித்து குணத்தைக்கொண்டு ஆசீர்வதிக்க வேண்டுமாய் பாரதநாட்டு பாவல நாவல பக்தசிரோன்மணிகளின் பாதாரவிந்தத்தைப் பலகாலும் வருடி, பணிந்து பணிந்து பன்முறை பணிந்து மன்றாடிக் கேட்டுக்கொள்கின்றேன்.

இப்படிக்கு,
மு. வே. நல்லசாமி.

# ரெஜிஸ்தர் அறிவிப்பு.

---

இதனால் சகலமானவர்களுக்கும் தெரிவிப்பது என்ன வென்றால், கட்டுக்குடிப்பட்டி. ம-ா-ா-ஸ்ரீ. மு. வே. நல்ல சாமி தாஸ் அவர்களால் எழுதப்பட்ட பக்திரசக் கீர்த்தன மென்னும் இப்புத்தகத்தின் சகல சுதந்தரத்தையும் ஷெயா ரிடமிருந்து பெற்றுக்கொண்டபடியால், இப்புத்தகத்தையா யினும், இதில்கண்ட கீர்த்தனைகளாயினும் எங்களுடைய உத் தரவன்றி யாரும் அச்சிடக்கூடாது; அப்படிமீறி அச்சிடுவ ரேல் கவர்ன்மெண்ட் சட்டப்படி சகல நஷ்டத்திற்கும் உள்ளாவார்களென்று இதனால் அறிவிக்கப்படுகிறது.

இப்படிக்கு:

ஸ்ரீகாமாக்ஷி விலாஸ் புஸ்தகசாலையார்

வேப்பேரி போஸ்டு, சென்னை

உ

சிவமயம்.

கணபதி துணை.

# பக்திரசக் கீர்த்தனம்.

## விநாயகர் துதி.

நேரிசை வெண்பா.

1. அத்தி முகத்தோனே ஐங்கரனே எந்தனுக்குப்
பத்திரசக் கீர்த்தனப்பா பாடவருள்—நித்தமுமென்
சித்தத்தில் வைத்திருத்திச் சேவித்தேன் வேண்டுபர
முத்திதரு முன்னவனே வா.

தங்கநிறமேனியுள்ள என்ற வர்னமேட்டு

கண்ணிகள்.

2. அண்டர்முனி வோர்கள்தினந்
தொண்டுசெய்திடுங் கணேச தேவா—உன்
தொண்டர்வினை தீர்த்திடுவாய்
எண்டிசைபுகழ் மகானுபாவா. அன்

நித்தநித்தம் நத்தியுனைப்
பத்திசெயுமன்பர்மன தாறும்—படிக்
கித்தருணஞ் சித்தம்வைத்துக்
கர்த்தர்பரி சுத்தஆசி கூறும். அன்

வேசைவாச லேசுவர்க்க
வாசலென வேநினைத்து நாளும்—மட
ஆசையினு லேமெலிந்து
ஐயோநொந்தேனே எந்தனையாளும் அன்

நாமகள் வசிக்குங்கற்ற
மானகர்தனிலேவாழும் நாதா—நல்ல
சாமிதமிழ்ப் பாடியும்வ
ராததென்னமோ இதுவும் வாதா அன்

---

ஏறுமயிலேறிவிளையாடும் என்ற திருப்புகழ்மெட்டு.

3. வேறுதவி யாரெனக்கு நீதுணைகணேசா
வித்தைவரந் தந்திடவே வந்தருள்கணேசா.
சீருடனே மூசிகமீ தேறிவாகணேசா
சித்திபுத்தி யோடுதிருச் சேவைதாகணேசா.
கூறுவர மெந்தனுக்குக் குஞ்சரகணேசா
குஞ்சரி உமைபயின்ற கோட்டாணைகணேசா.
ஆறுமுக சுந்தரனுக் கண்ணனேகணேசா
ஆதிநடு நாயகா அடியவர்கணேசா.

---

# பக்திரசக் கீர்த்தனம்.

## சரஸ்வதி துதி.

நேரிசை வெண்பா.

4. செம்பவள வாயாளே திசைமுகன்றன் தேவியரே
கம்பனைமுன் காத்த கலைமகளே—நம்பியுனைக்
கும்பிடுமென் னாவிற் குடியிருந்து பக்திரசப்
பண்படிக்கும் பாக்யமருள் வாய்.

பகாரியாலா என்ற வர்னமெட்டு

பல்லவி.

5. கலை வாணித்தாயே நாவில்
வந்தருள்வாயே கலை

அநுபல்லவி.

வாணியே யாழ்ப்பாணியே மயிலமர்ந்த சிங்காரி
வாகாச் செபமாலை விளங்கு கெம்பீரி
உனை - வேண்டினேன் கோரி
எனை - யாண்டிடாய் நேரில்
வித்தகச் செல்வியே சித்தமீ தித்ததி
நத்தினனே நல்ல சாமிஇப் போதில் கலை

---

## பார்வதி மாதா துதி.

நேரிசை வெண்பா.

6. பார்வதியே தாயே பைங்கிளியே சங்காளன்
பாரியெனு மாபெரும் பவானியே—சீர்பாதந்
துணையா யெனக்குவந் துதவிபுரிய வேணுமம்மா
கனிகரும்பே தேனே கண்ணே.

அம்பிகா உன்மகன் என்ற வர்னமேட்டு

பல்லவி.

7. ஆலவாய் மீன லோசனி
ஞாலமெஞ் ஞான பூசணி

அநுபல்லவி.

மாலழகர் சோதரியே
வந்தருள் பராபரியே
சாலமேன் தயாபரியே
சாட்சி மாட்சி காக்ஷி ஆக்ஷியே. ஆல

சரணங்கள்.

ஆதாரம் நீயலால்வே
றுரெனக்கு மாதருவே
வாதே னரன்மகிழ்வே
வாக்குண் டாக்கு நோக்கு தீர்க்கமாய் ஆல

பத்திபண்ணிப் பூசைசெய்தும்
பாலாபி ஷேகஞ்செய்தும்
சித்தமிரங் காதுவாதும்
செய்ய லாமோ உய்வுண் டாக்குவாய் ஆல

பெற்றபிள்ளை பேரிற்பிழை
பேசுவதா மாகின்பிள்ளைக்
கொற்றவனென் றென்றமிழைக்
கோதில் லாதுன் பாத மீதிடாய் ஆல

## சிவபெருமான் துதி.

### கட்டளைக்கலித்துறை.

8. பாடிப்படித்துப்பலதோத்திரம்பண்ணிப்பார்த்துன்பதம்
தேடிப்பிடிக்கவகையறியேனுன்றன்சேயனெனை
நாடிக்கிருபைவைத்தாண்டிடுவாய்நற்சிதம்பரத்தில்
ஆடும்பதியேகருணைமணிச்சச்சிதானந்தமே,

### கொடுமையான கோபம்வேண்டாம் என்ற வர்னமெட்டு

### கண்ணிகள்.

9. அடிமைநானுனக்கென்னாளும் ஆண்டிடவாராய்
விடையிலேறும்ஈசனே சர்வேசனேகாராய் அடு

அவனிதனிலினியுந் துயராலேநோவதோ
மௌனியாகதினமும் மாய்கையாலுழல்வதோ அடு

எண்ணத்தொலையாப்பிறவிக் கென்னசெய்குவேன்
கண்ணேயறும்பொன்னேவந்து காத்தாளுய்குவேன்

கோபமென்மேற்கொள்ளலாமா கோசலையீன்ற
ராமன்மைத்துனவர்மஞ் செய்தாலிதுநன்று அடு

சிறுவனுனுன்சேவடியைத் தேடினேநேராய்
தருவேனென்றுவரமேநல்ல சாமிசரிக்கூராய் அடு

ஆயநாதா பீரஸ்காந்தே என்ற வர்னமேட்டு

கண்ணிகள்,

10. ஆலகாலமுண்டவனே நீலகண்டபூமா
ஜாலம்வேண்டாம்ஏழையை தற்காத்திடுவாய்பூமா ஆல

நாலுபேரைப்போலவே நான்வாழஞானந்தாரும்
நாலுமாடல்கூடல்வாழ்மீனாக்ஷிகோனேகாரும் ஆல

காணவேணுமேயுன்பாதம் காலகாலசூலா
பூணுமுப்புரிநூலோனே பூமாவனுகூலா ஆல

போற்றிபோற்றிபுண்ணியனேபோற்றிஎன்முன்வாராய்
சாற்றும்நல்லசாமிதமிழ் சாயுச்யாகண்பாராய் ஆல

---

ராஜவிசுவாச லாலா என்ற வர்னமேட்டு.

பல்லவி.

11. பாண்டரங்க சம்புசிவ பரசுபாணி
சிவ-பரசுபாணி பாண்

அநுபல்லவி.

பாண்டரங்கன் நீல கண்டதுங்கன் சீல பாண்

தொகையரு.

பார்வதிகொழுனன் பவன்பிரப்பிலிபசு-
பதிபகவன் நக்கன்பித்தன்
நீரணிந்தோன்காம நாசன்கிரீசன்கா
மாரிசூலிநந்தி சுத்தனத்தன்.

முடுகு.

சங்கரன்யோகி வரன்அழலாடி
நம்பன்சதாசிவன் சுடலையிலாடி

பாட்டு.

சடைமுடியோன் சுந்தரன்
விடைமீதேருந் தந்திரன் பாண்

---

## சோமசுந்தரக்கடவுள் கீர்த்தனை.

சாமளரூப தேகனே என்ற வர்ணமெட்டு

பல்லவி.

12. மாமதுரைச் சுந்தரமே வரந்தருவாய் மா

அநுபல்லவி.

மாமரைப்பாதனே வரப்பிரசாதனே
வாதுசெய்யாதேமாது பாகனேவணங்கினேனே மா

சரணங்கள்.

காமனையெறித்தவா காலனையுதைத்தவா
நேமமுடன்பணிந்தேன் நேரில்வாநீலகண்டா மா

அன்பேசிவாக்ஷரம் ஆனபஞ்சாக்ஷரம்
அனுதினமும்நமசிவாய வென்றுரைகுறேனே மா

ஆலமுண்ணும்வாயனே அடியவர்கணேயனே
பாலனும்நல்லசாமி பாடினேன்பதமருள்வாய் மா

---

பவனகிரியதனிலுறை என்ற வர்னமேட்டு

பல்லவி.

13. திருமதுராபுரியில்வளர் சிவனேவாசொக்கலிங்கம்
சிவனேவா சொக்கலிங்கம் திரு

அநுபல்லவி.

மருவுமுமைபாகா எந்தன்
மனத்துயரகற்றிட வித்தருணம் திரு

சரணங்கள்.

நரியைப்பரி யாக்கியவா
நமனைவிழத் தாக்கியவா
திரிபுரந்தனை யெரித்தவா
தேவசங்கர பூவலங்கார திரு

தொகையரா.

திருநீறுபூத்த சிவசெம்பொற்சோதி
மறைநான்கும்புகழ்கின்ற மணியேஆதி.

பாட்டு.

ஒருபோதும் யான்மறவேன்
உத்தமர்பணி திருவே
தரணியில்நல்ல சாமிவே
தாவெனத்தினம் ஓதிடுவனே திரு

துலங்குசெம்போன் என்ற வர்னமெட்டு

பல்லவி.

14. சதங்கைகலகலவென நடமிடுசிவதாண்டவராயாஎங்கள்
சச்சிதானந்தப்பொருளே
சருவேச்வர சச்சிதானந்தப்பொருளே சத

அநுபல்லவி.

சந்ததம் உந்தனை சிந்தையில் வந்தனை
சாற்றும் அன்பரைக் காக்கும் சச்சிதானந்தப்பொருளே
சருவேச்வர—சச்சிதானந்தப்பொருளே சத

சரிகம பதநிச தகதிக ததிங்கண
தாந்தோ மெனநடிக்கும் சச்சிதானந்தப்பொருளே
சருவேச்வர—சச்சிதானந்தப்பொருளே சத

சங்கார ரெங்கேசனின் றங்கையும் நாணத்
தாண்டிநடம்புரியும் சச்சிதானந்தப்பொருளே
சருவேச்வர—சச்சிதானந்தப்பொருளே சத

சாதுசனமேதினமும் வேதமோதியேமனமும்
தானேவைராக்யங்கொள்ளும் சச்சிதானந்தப்பொருளே
சருவேச்வர—சச்சிதானந்தப்பொருளே சத

சரணம்.

வணங்காமுடி ராவணன்சிரம்பத்தும்
வாங்கியமாதவ னுந்தினம்நத்தும்
தினமுங்கார்க்கும் தியாகநற்சித்தம்
தேடும்நல்லசா மிக்கருள்நித்தம்
தேஜோமயானந்த சுத்தன்
உனைப்பணியத்தீரும் பிறவிநோய்ப்பித்தம் சத

---

இவளைப்போல பெண்டு என்ற வர்னமெட்டு

கண்ணிகள்.

15. உன்னைப்போல தெய்வம் - உலகி
இல்லையென் செய்வோம்
கண்யமுந்தன் சைவம்
கருதினல்மிகு வைபவம் உன்

சாமிஎன்மேல் வாது - நீ
தான்செய்யாதே சாது
பூமியாசை சூது
போக்குவாயிப் போதுதீது உன்

காமமெனு மோகம் - அதிற்
கழிந்ததே என்தேகம்
தீமையாமிப் போகம்
தீர்ந்திட்டாலே யோகம்யோகம் உன்

நல்லசாமி பாடி - மிகு
நலம்பெற நாடுடி
தொல்லைதீர நாடி
தொழுதேன்சரணம் கோடிகோடி உன்

---

தாதாபாய் என்ற பல்லவி மேட்டும், நம்பினேரை மறந்தான்
என்ற சரணமேட்டும் சேர்ந்த புதிய வர்னமேட்டு

கண்ணிகள்.

16. சோமனை-மாமதுரைச் சோமனை
வணங்குவோம் பூமனை
தேன்கமழும் நாமனை
தேடி யோடிக் கூடிப் பாடி சோ

ஆண்டவன் - ஜீவர்களை யாண்டவன்
சிதம்பரத் தாண்டவன்
பாதமதை வேண்டவே
பார்ப்பான் துயர் தீர்ப்பான் எங்கள் ஆண்

பூரணன் - புகழுமா பூரணன்
புண்ணியதே வாரணன்
கண்யசிவ காரணன்
கால கால நீல கண்ட பூர

சாமியை - சோமதுரைச் சாமியை
சொக்கலிங்க நேமியை
பூமிபுகழ் நாமியை
போற்றி நல்ல சாமி சாற்றும் சாமி

---

இராகம் - தோடி, தாளம் - ஆதி.

பல்லவி.

17. ஆனந்தமாகிய ஆண்டவனே-மாறி
யாடிநடம்புரி தாண்டவனே ஆன

அநுபல்லவி.

அத்வீதக்காட்டிலே ஆகாயமேட்டிலே
ஆனந்ததாண்டவ மாடாயோ சச்சி
தானந்தவாழ்வுதரத் தேடாயோ ஆன

சரணங்கள்.

போதச்சுடரொளி புண்ணியப்பேரொளி
போகபாக்ய மெனக்குத்தாராயோ-சுக
மாகவிருக்கக் கண்ணுற்பாராயோ ஆன

அருமறைப்பொருளே ஐயாநீயருளே
அப்பாசண்டனேலே விடுவானே-உந்த
அடியாரென்றூற் பயப்படுவானே ஆன

ஆராவமுதமே அஞ்சலிசெய்தோமே
தாராய்நல்வரமென்று தேடினனே-நல்ல
சாமியுனதுபுகழ் பாடினனே ஆன

---

ஆரிடஞ்சொல்லி என்ற வர்ணமெட்டு

பல்லவி.

18. சுந்தரேசனே - உன்
மைந்தனைக்கண்பா ரீசனே சுந்

அநுபல்லவி.

இந்தவிதஞ்செய்தால் எந்தவிதம்பொறுப்பேன்
அந்தரிமணவாளனே வந்தனைபுரிந்தேனனே சுந்

சரணங்கள்.

மருமகன்பிரமன் மண்டையில்வரைந்ததுபோதும்
மைந்தன்சண்முகனேனென் மேல்சட்டையெப்போதும்
திருமாலுன்மைத்துனனைத் தேடிஒடினேனேதும்
தெரியாதவன்போல் விடுத்தான்
அறியாதவன்போல் நடித்தான் சுந்

பூலோகமாய்கையிது பொல்லாதநாடகமே
புரட்டுக்கும்உருட்டுக்கும் இதுஒருதாயகமே
பாலன்நல்லசாமி படித்துப்பஜனையதிகமே
பண்ணியுமுனது காக்ஷி
இன்னுமீயாதேனோ சுக்ஷி சுந்

---

ஸ்வாமி விவேகாநந்தா என்ற வர்ணமெட்டு

பல்லவி.

19. சத்துசித்தானந்தமே
சகலமறைவேதாந்த சத்து

அநுபல்லவி.

சரணமடையக் கருணைபுரிவாய்
தருணமெனக்குன் பதமதருள்வாய் சத்து

சரணங்கள்.

தாளொணுச் சங்கடத்தில்
பாலன்மூழ்கிக் கிடத்தல்-சரியோவந்து
தானந்தவயோகர்
மோனமுனிவாகர்
தன்வினைதான் போகத் - தவம்புரிந்து
சரியை கிரியை யோகம் ஞானம்
தனையடைந்தாரெனக் கருள்மோனம் சத்து

தொகையரு.

சண்டப்ரசண்டனு னென இருமாந்துபின்
சஞ்சலத் தாழலாமோ
அண்டபிண்டத்திலே ஒன்றுகிநின்றவா
அடியன்மேல் வர்மமாமோ.

பாட்டு.

சாதிமாணிக்கக்கட்டி
சாஸ்திரமானகட்டித்-தங்கமேஎன்

ஞுதியேபாடும் நல்ல
சாமியேதேடும் உள்ளத்
தேஙடமாடவல்ல-சங்கநிதி

தருக பதும நிதியுந் தானே
சிறுவன் குறைதீர்த் திடுஞ்செந் தேனே சத்து

---

புதிய சிந்து வர்னமெட்டு

இராகம்-தேசிகதோடி, தாளம்-ஆதி.

கண்ணிகள்.

20. செஞ்சடைக்கடவுளுன் தஞ்சம்-அஞ்சாதேயெனச்
செஞ்சொல்புகலே கொஞ்சமேனுங்கெஞ்சினேனுனை
செஞ்சரண் செய்தேனேமத
குஞ்சரத்தை யின்றமிகு
ரஞ்சிதப்பார் வதியொடு
கொஞ்சிவினை யாடும்நட
ராசா-பவ-நாசா செஞ்

இந்தநானிலபாச பந்தப்பெருந்துன்பத்தில்
சிந்தாகூலத்தின னழுந்திடவுன்மனத்தில்
ஏற்குமோ கருணைக்கண்ணால்
நோக்கவே எண்ணமிலையோ
பார்க்குளே அதிமிகுசெல்
வாக்குள்ள சிதம்பரம்வாழ்
வோனே-எந்தன்-கோனே செஞ்

சீருடைச்சந்திரன் சிரமீதிலேதரித்த
ஆரணனேமுப்புரத் தைச்சிரிப்பாலெரித்த

பூரணு உலகுசுப
காரணு உனையேநம்பும்
தாசனும் நல்லசாமியும்
பூசனைபுரி யுங்கங்கா
தரனே-பரா-பரனே செஞ்

---

சேந்தில் குமரவேளுண்டு என்ற வர்னமெட்டு

பல்லவி.

21. சொக்கலிக்கத் தங்கமுண்டு
துணைநமக்கு சொக்க

அநுபல்லவி.

சுவர்க்கபதமது தரவருகனவனை
நினைக்குமடியவர் மிடிபொடிபடச்செயுஞ் சொக்க

சரணங்கள்.

தொந்தரையேதவிர்த் தெந்தவிதத்திலுஞ்
சிந்தைமகிழ்வரந் தந்திடவேசிவ சொக்க

சோகமதாகிடு வேளையிலேநம
னேகிடவாவெனும் போதெமக்கேகுண சொக்க

தொழுதடிபணிபவ ரெனுமுதியவர்வினை
இலையெனும்படிசெயத் திருநடமிடுசிவ சொக்க

தோத்திரமுந்திருச் சேத்திரமும்பெருஞ்
சாத்திரமும்புகழ் பாத்திரமாகிய சொக்க

சோதியைப் பணியும்நல்ல
சாமியைக்கண் காணித்துநற்
சேதியேஅரு ளிச்சடை
மீதிலேமதி யணியுஞ் சொக்க

---

## மகாவிஷ்ணு துதி.

நேரிசை வெண்பா.

22. நீலக்கடலில் நெடுந்துயில் கொண்டோ னாதி
மூலமென்ற யானைக்கு முன்வந்தோன்—காலா
லுலகளந்த மாயன் ஒளிமகுட ராவணனின்
றலைகளைந்தான் றுள்ள சரண்.

இராகம்-தேசிகதோடி, தாளம்-ஆதி.

பல்லவி.

23. ஹரி-நாராயணனே உனைநம்பினேனே
திருப் பாராயணமே செய்துபாடினேனே ஹரி

அநுபல்லவி.

நாராயணாஎன்மிடி தீராயோமேகவண்ணா
பாராய்திருக்கடைக்கண் நேராய்த்திருப்பதிவாழ்நாரா

சரணங்கள்.

சங்கடந்தீர்த்திடாய் வெங்கடாசலபதி
எங்கிடம்உனையல்லால் மங்களம்பொங்கும்ஸ்ரீ நாரா

உன்னையல்லால்கதி உண்டோகருணாநிதி
அன்னைபிதாவைப்போல்வந் தாதரிப்பாயேததி நாரா

வம்பன்ராவணன்றலே வாங்கியதிருமாலே
நம்பிடும்நல்லசாமிக் கின்பமருளிக்காலே நாரா

---

முருகா மனமிரங்கவு மிலையா என்ற வர்னமெட்டு.

பல்லவி.

24. ராமாஎனைக்கைவிட லாமாநீவாமா
நாளும்உனையேநத்தி னேனே ஆளுமயோத்தி ராமா

அநுபல்லவி.

உன்பாதந்தேடியே ஓடித்திரிந்தேனே
ஓகோஎனக்காராதது மாகாதாகாதயவுசெய் ராமா

சரணங்கள்.

வேணுந்திருவருளுன் பாதசேவையே
காணும்படிக்கருள் கார்வண்ணநானேஎன்
சாணுடலுக்கலைந் தோடுவதும்முறையோ
சரியோ திருவுளம்பற்றின
தரியே தெரியேனுன்னை ராமா

பந்தங்களெல்லாம் பரந்திடச்செய்திடாய்
பாலன்படுந்துயர் கொஞ்சமோகொய்திடாய்
சிந்தைசந்தோஷிக்க நல்வரமீய்ந்திடாய்
சிஷன்நல்ல சாமிதுதித்
தேனேயருள் வாயேததி ராமா

---

## பாலவடிவேலன் துதி.

விருத்தம்.

25. கருணைமழையெனநினது கடைக்கணால்நோக்கியெனைக்
காத்திடக் கிருபைகொண்டு
கந்தனேகௌரிவுமை மைந்தனேகனிவள்ளி
சொந்தனே வந்தாளுவாய்
அருணகிரியுனதுதிரு வகமகிழஇனியசுவை
அமுதமென வேசெப்பிய
அந்தத்திருப்புகழை யுந்தித்தவுன்செவிக்
கெந்தன்சொ லெம்மாத்திரம்
தருணமுனைநம்பிமிகு சரணமதுசெய்துமிச்
சாலங்கள் செய்யலாமா
சங்கரன்சப்தமிகு சாகரந்தானழைத்
தானவன் தந்தபாலா
மரணமதுவருசமயம் அருகில்வரவேணுமே
வடிவேலெடுத்து நாளும்
வந்தடிபணிந்தேத்து மடியவர்கள்துயர்தீர்க்கும்
மயில்வா கனக்கடவுளே.

---

### துலங்கு சேம்போன் என்ற மேட்டில் வேறு.

பல்லவி.

26. விளங்குமரகத மணிமுடிமேவிய
வேதாபழனிமலை - வேலாயுதக்கடவுளே
தெய்வானைபாகம் - வேலாயுதக்கடவுளே விள

அநுபல்லவி.

துலங்கிடுநற் சேவற்கொடியோனே
தொண்டர்கள்துயர் தீர்த்திடுமமரோனே
இளங்குமராகரு ணாகரத்தேனே
இடர்பவவினையருத் திடுமுருகோனே
ஏதுதாமதஞ் சிமானே
எந்தனையாள-இதுவேசமயம் பூமானே விள

தொகையரு.

ஈயாதலோபிகள் தனைப்புகழ்ந்தேபாடி
யுழலவென யிடுதல்நன்றோ
தாயாய்தகப்பனு யெல்லாவுமானநீ
தயவுவைத் தாள்வதென்றோ.

பாட்டு.

இரங்கிடுமனமுடை யாய்மயில்வீரா
இணையடிசதமென நினைந்தனேராய்
வணங்கிடுமடியவர்க் கருளதுங்கூராய்
வரதசுகாநல்ல சாமியைக்காராய்
வள்ளிகணவனே தீரா—மகிமைச்சத்தி
வடிவேலிலங்கு மொய்யாரா விள

வாகாவா வென்னளும் என்ற வர்னமெட்டு,

கண்ணிகள்.

26. பாரோர்புகழும் பழனிமலைத்தண்ட
பாணியுனது தஞ்சம்-உன
தீராறுகண்ணாலே நோக்கிஎந்தன்வினை
தீராயின்னுமேன் வஞ்சம்
செந்தூராதீரா யின்னுமேன்வஞ்சம்
வந்தாளாய்தீரா யின்னுமேன்வஞ்சம் பா

தட்டுக்கெட்டுத்தடு மாரித்திரியவோ
சாமிகுருபரனே - வேசை
பொட்டுக்கும்மெட்டுக்கும் இஷ்டப்பட்டுப்பாழாய்
போவதோ சண்முகனே
பாலனான்-போவதோ சண்முகனே
வேலவா-போவதோ சண்முகனே பா

ஆசாபாசம்நீங்கிப் பேசாமௌனியாய்
ஆவதும் என்னளோ—என
தாசைக்கந்தாகுமரா உன்னடைக்கலம்
ஆவதும் என்னளோ
தொண்டனாய் - ஆவதும் என்னளோ
கொண்டாட - ஆவதும் என்னளோ பா

ஆகாசக்கோட்டை அளவில்லாச்சேட்டையில்
அந்தோநொந்தேன் வாடி—உல
கானந்தமேபர மானந்தமென்று
அலைந்தேன் பணந்தேடி

பேயென-அலைந்தேன் பணந்தேடி
நாயென-அலைந்தேன் பணந்தேடி பா

சத்துசித்தானந்த தற்பரனே—நல்ல
சாமிதமிழ்ப் படித்தேன்—உயர்
அற்புதப்பொற்பதச் சிற்பரனுன்னை
யடையக்கடைப் பிடித்தேன்
மெஞ்ஞானம் - அடையக் கடைப்பிடித்தேன்
நன்ஞானம் - அடையக் கடைப்பிடித்தேன் பா

---

தாதாபாய் என்ற வர்ணமெட்டு

பல்லவி.

28. வேலவா பாலவடி வேல

அநுபல்லவி.

விகசிதநடமிடுங் கதிர்வடி வேல

சரணங்கள்.

பாலாமிர்தப்பழனி வேலா திருப்பவனி
வரும்போதென்மனம் உருகியானந்தம்
பெருகிச்சன்னதிக் கருகினில்வந்தேன் வேல

தொகையரு.

மாதாபிதாவுமாய் வேதாந்தநாதமாய்
வந்தவா குமரகண்யா.
ஆதாரம்நீயன்றி வேறேதுஓதுவாய்
ஐயனேசுப்ர மண்யா.

பாட்டு.

ஸ்ரீ தாபிரான்மகிழும் வேதாதினம்புகழும்
சாதுசர்க்குண சண்முகசாமியுன்
மீதுசிந்தனையே நல்லசாமியும் வேல

---

இராகம்-இந்துஸ்தான்தோடி, தாளம்-ஏகம்.

பல்லவி.

29. சாமிபாதமலர் சதாதுதிகந்த சாமி

அநுபல்லவி.

சாமிகருணைக டாக்ஷமாதவயோகத்
தார்க்குங்கடைக்க ணேக்குஞ்சண்முக
சரஹணபவ குமரமுருக சாமி

சரணங்கள்

வேதாந்தஞானே விளங்குமிஸ்தானமே
வேதமோதும் வேலனேகதி
வேறில்லையென் றனுதினந்துதி சாமி

தொகையறு.

சம்சாரசாகரந்தனிலே படுந்துயர்
சகிக்கமுடியாது சூர
சம்ஹாரசத்திவேற் சாயுஜ்யப்பதமதைச்
சந்ததம்பணி வொய்யார

பாட்டு.

சரசவள்ளிநேசன் சர்க்குணச்சர்வேசன்
தாசன்நல்ல சாமிபணியும்
சர்க்குணாகர சுப்ரமண்யம் சாமி

---

குன்றைக்குடி குமரகுருபரனடி நாடி
என்ற வர்னமேட்டு.

கண்ணிகள்.

30. அன்றுமலர்ந்தபூப்போ லென்றுமலர்ந்திருக்கும்
ஆறுமுகவிலாசன்
குன்றினில்வாசன்
குறத்திநேசன்—அசுரர்கிளை
யன்று சொன்றிட்ட நாசன் அன்

தண்டாலானந்தம் பொங்குந்தெண்டாயுதபாணிக்கி
ரண்டுபெண்டாட்டிகளுண்டாம்
கரம்பன்னிரண்டாம்
முகமூவிரண்டாம்—பணிந்தவர்க்குப்
பண்டவினை போவ துண்டாம் அன்

சட்டிவெண்ணெயைத்தட்டி கொட்டித்தின்றுதிரிந்த
தாய்மாமன் தான்நல்லவனா
நிசமுள்ளவனா
பசப்புள்ளவனா—மவன்புகழைக்
கண்டவனும் விள்ளுவனா அன்

பூசைபுரியும்நல்ல சாமிக்கருளுஞ்சுந்த
ரேசன்பயின்றபாலன்
ஷண்முகவேலன்
தெய்வானைலோலன்—பழனிபுரி
வாசமிருந்த சீலன் அன்

---

பாண்டிய னீன்றமீனாக்ஷி என்ற வர்னமேட்டு

பல்லவி,

30. ஆனந்த-தாண்டவன்மைந்தா
அருள்வாய்-அண்டினேனுன்றாள் ஆன

அநுபல்லவி.

ஆண்டருள்-ஆண்டியேகந்தா
நின்சேவை-வேண்டினேன்வந்தாள் ஆன

தொகையறு.

அரியின்மருகாவென இருகரங்கூப்பியும்
ஆதரித்தாளொணாதோ
திருவருள்தந்திடு முருகனேயென்றுநான்
செய்திடுமுறை கேளாதோ.

பாட்டு.

பந்தத்தின் சொந்தமாய்க் கெட்டேன்
பாவியேன் பணியாதுனை விட்டேன் ஆன

தொகையரு.

ஐயோவனிதங்கள் செய்யாதுபாக்கியிலே
அகங்கார மமதையாலே
அனியாயமானவிச் சடலத்தின்வினைசொல்ல
முடியாது சேடனாலே.

பாட்டு.

வல்லவா-சாமிவேலையா
நல்லசா-மீயையாளையா ஆன

---

மாமயில்வீரா சேந்தூரா என்ற வர்னமெட்டு

கண்ணிகள்.

32. செந்தில் குமரவேலா தினமுங்காப்பாய்
தேவியருளும் பாலா உனதுபதஞ்
சிந்திக்கு மெனையாளாய் மனதுகந்து
தெய்வானை மணவாளா குணாளா
அந்தி சந்தியு முனை
வந்தனை புரி யெனக்
கிந்தவேளைவரந் தந்தருள் கந்தனே திருச் செந்

மங்கைவள்ளிநன் னேசா மாதவர்வாச
மாபரங் கிரிவாசா சர்வேசா
கெங்கை யணிந்தயீசன் மகிழுங்குண
மங்கள மந்தகாசா உல்லாசா
அங்கும் எங்கும் நிறைந்த
அம்பிகை பெற்ற கந்தா

நம்பிக்கும்பிட்டே னெந்தா
நல்லசாமிக்குச் சொந்தா. செங்

---

ஞானரஞ்சிதமே என்ற வர்ன மெட்டு

33. வேத சந்தனமே—வடி
வேல சுந்தரமே—திரு
வேங்கடம் பணி வீரனே குரு
வேதினம் பணி தீரனே சுரர்

தேடிடும் பொருளே—மனந்
தெளிய வந்தருளே—மலைத்
தேனு டன்தினை மாவளித் திடும்
மானுடன் மயின் மேனடித் திடும்

ஞான குஞ்சிதமே—பிர
சாத ரஞ்சிதமே—இந்த
ஞாலத்திற் பெண் காதலே பெரும்
வேலை யாய்த்தலை மேலெழுதிய

பாவஞ் சாருமையா—பழி
பாவந் தீருமையா—சிறு
பாலனுன் பெரும் பாவியா யிருந்
தாலுங் கோபங்கொள் ளாமலே வரந்

தாரும் புண்ணியனே—அவ
தார கண்ணியனே—வெண்
டாமறை மரு சாமர முட
னேவிளங் கிடும் பூரண குரு

தேசிக மணியே—உமை
தேடுங்கண் மணியே—திருச்
சேத்திர மும்நை வேத்ய மும்பல
சாஸ்தி ரம்பெறு தாஷ்டிகா கழு

காசலப் பதியே—எனைக்
காத்திடத் ததியே—கரு
ணாகரத் திருப் பாதமே கெதி
யேயெ னத்தின மேதொழும் நல்ல

சாமியும் பணியுஞ்—செந்
தமிழதை யணியு—மலர்த்
தாளனே இந்த ஏழை பின்மிடி
யோடிட க்ருபை பாலித் தருளச்

சாமி தாமதமே—செய்வ
தாகுமோ வின்மே—சவ்
வாது சந்தன மேனி யுற்றிடு
ஊதுசங் கொலி வான முட்டிடு

பழனி யாண்டவனே—உன்
பாதங் கெதியென்றுமே வேத

---

அடுக்குமல்லிகை தோடுக்கு மேத்தையிலே என்ற மெட்டு

கண்ணிகள்.

34. அடுக்குமல்லிகை யணியுஞ்செந்தூரா
அரோகரா மெஞ்
ஞானபண்டித னசிங்காரா-பர

மானந்தாமுரு கானந்தாகரு
ஞானந்தாதிரு ஞானந்தாகின

தடிபணிந்திடு மடியர்க்கடியவா
அஞ்ஞானம் நீக்கி
யாளவேணும் பாலவேலவா அடுக்கு

குடிதழைக்கநற் குழந்தைவந்தாற்போல்
குணமா யுளத்திற்
குடியிருந்தருள்புரி குவாயென்பால்-அன்று

கோதில்லாமறை போதினையென்றன்
மீதினிலிந்த வாதுசெய்வது
குழந்தைசெய்திடுங் குறுவிளையாட்டா
குமார சுவாமி
குருபராநின் றிருவிளையாட்டா அடுக்கு

---

அமரநபிமேரே என்ற வர்ண மெட்டு

பல்லவி.

35. ஆண்டருள்வாய்-உனைவேண்டிப் பணிந்தேனெனை ஆ

அநுபல்லவி.

ஆண்டருள் வாயே - சிவ
ஆண்டியின் சேயே-ஜெய
காண்டீபன் மைத்துனர்க்கு
வேண்டிய மருகனன குகா ஆண்

சரணங்கள்.

ஆளாய் அசுரர்குல
காலா மறையதனை
ஆதிசிவனுக் கோதியநாதா
நீதிதனைக்க ஆளவொண்ணாதா ஆண்

சரணம் பின்முடுகு.

பாதம் பணியவென்று
பாடிவந்தேனே உன்றன்
கீதம்படிக்க வின்று
கிடைத்தகாலம் நன்றுநன்று
சேவைதருவாய்-கார்க்களன்
நேரில் விரைவாய்-சுகிர்த
மாகவருவாய்-கிருபை
பாலித் தருள்வாய்
குறக் கோமானே
வரத் தாமதமேன்
சுரர்பூமானே நல்ல
சாமியைத் தானே ஆண்

---

எனக்கந்தப் பெண்ணல்லவோ என்ற வர்னமெட்டு

கண்ணிகள்.

36. தேன்கமழுந்தென் பழனியாண்டவனே
சாமி ஆண்டவனே
பழனி யாண்டவனே-மா
திவ்யமணிருத்ராக்ஷம் பூண்டவனே தே

சொந்தமுள்ள செந்திற்பதிக்கந்தவேளே
சாமி கந்தவேளே
பதிக்கந்தவேளே-உன்
மைந்தன்றுயர் தீர்த்திடுவாயிந்தவேளை தே

மால்மருகனுன குகநாதகந்தா
சாமிநாத கந்தா
சிவநாத மைந்தா-என்
மனத்துயர்தீர்ந்திடு மிவ்வேளைவந்தால் தே

மைந்தன்நல்லசாமி தமிழ்ப்பாருங்கந்தா
வரந்தாருங் கந்தா
சிவகாமி மைந்தா-குற
மாதுவள்ளிநாயகா இவ்வேளைவந்தாள் தே

---

தேவாதிதேவா சேயவல்லவா என்ற மெட்டு

கண்ணிகள்.

37. தீரப்ரதாபா ஜெயவல்லவா
சீஷன்நல்ல சாமியையாளவா
பேருபகாரப் பெருநல்லவா-உனைப்
பேணிப்பணிந்தே னருள்வேலவா தீரப்

தந்தைதாய்குரு தெய்வமும்நீயே
சந்ததம்போற்றி செய்தேனுனைய
சிந்தையிலென்னாளும் வந்தனையே-நான்
றேடிப்புரிந்தேன் சேனாபதியே தீரப்

கானக்குறவள்ளி மோகனனே
கன்னிதெய்வானை மணவாளனே

மோனமுனிவர் பணிபதனே-திரு
முருகாகுக சண்முகநாதனே தீரப்

பெற்றபிள்ளையைத் தள்ளலாமா
பேசாவிரதம்நீ கொள்ளலாமா
கற்றவனென்றெனை சொல்லலாமா-வரக்
காச்சிதந்திடாமற் செல்லலாமா தீரப்

தேன்கமழ் தென்பழனிக்கதிபா
தேவர்துயர் தீர்த்தமாமகிபா
பூங்கமழ்மார்பா புண்யகுணவா-நம்பிப்
போற்றிடுந் தொண்டரையாளுபவா தீரப்

---

இன்னும் வர்மமேனையா என்ற வர்னமெட்டு

கண்ணிகள்.

38. ஆண்டிப்பழனிமலை
யாண்டியுன்பாதமலர்
ஆண்டியுன்பாதம்
அண்டின என்னைக் காராதழகோ அநீதம் ஆண்

முருகஉனதுபதம்
அருள்வாயே நித்யம்-எனக்
கருள்வாயே நித்யம்
திருமால் மருகா உனைச்சேவித்தேன் சத்யம் ஆண்

அப்பா கழுகுமலை
யப்பாநீ வாதா-என்மேல்
அப்பாநீதா
எப்போதும் யான்மறவே னினியபொற் பாதா ஆண்

தெய்வானையை மணந்த
செந்தில்பதி வேலா-எங்கள்
செந்தில்பதி வேலா
திவ்யகுணாளா நல்ல சாமியை ஆளாய் ஆண்

---

ராஜவிசுவாச லாலாலஜபதியே என்ற வர்ணமெட்டு

பல்லவி.

39. கானவள்ளிகோனேஎந்தன் கவலைதீராய்
பந்தக்கவலைதீராய் கான

அநுபல்லவி.

வானவர்கோனே
வணங்கிநின்றேனே
ஞானந்தரும்பழனிக்
கோனேதிருப்பவனிக் கான

தொகையரு.

தினநினைக்குமுனதடியார் மனதினிலே
என்னாளும் ஜெயமென்றோதி
வினையகற்றி மனப்பகையை
அனலிலிட்டபஞ்செனவே வெருட்டிநீதி

பாட்டு.

தன்னையுமுன்னையு மன்னையுங்கட்டி
கன்னிதெய்வானை யுடன்வரக்கூட்டி

என்னையாள்வாயே நீயே
பொன்னேசிகா மணியே காண

தொகையறு.

தேனொழுகுந் திருமொழியாய்தேவர் துயர்
தீர்த்ததேசிகா வென்நாதா
மான்மழுவுந்தரித்தசிவன் மைந்தாசெம்
பொன்சிலம் பொலிக்கும்பாதா

பாட்டு.

செந்திலில்வந்து முழங்குசங்கீதம்
சந்ததமுந்திகழ் சங்கொலிநாதம்

சிந்தித்து நல்லசாமி
வந்தித்திட்டேனே நேமி காண

---

பாராமுகமேனையா இன்னமுஞ்சும்மா என்றமெட்டு

பல்லவி.

40. கந்தா கருணைசெய்வாய் சந்ததந்திருக் கந்

அநுபல்லவி.

பந்தபாசச்செருக்குப் பற்றிக்கொண்டகிருக்கு
சந்ததம்பாராங்கல்லைத் தாங்கினற்போலிருக்கு

தஞ்சம் தயவுசெய்வாய்
வஞ்சம் செய்திடலாமோ
கொஞ்சும் குழவியென்மேல்
நெஞ்சம்திரும்பி இப்போ கந்

சரணங்கள்.

மாடுஆடுமாளிகை வீடுபெரிதென்றெண்ணிக்
கூடும்பாமரருடன் ஆடும்படிவிடாதே

கோடி புண்ணியமுனை
நாடித் திருப்புகழைப்
பாடிக் கெதிநீயெனத்
தேடி வந்தேனே திருக் கந்

ஆடாதஆட்டங்க ளாடுவாரைந்துவயதில்
கூடியம்மாந்தரிடம் கொண்டேன்கவலையென்மேற்

கோபம் வையாதேமனத்
தாபம் செய்யாதேபரி
தாபம் கார்க்காவிடிலோ
பாவம் வருகுமையா கந்

பக்ஷமாய்க்கோகுலத்தை ரக்ஷித்தமால்மருகா
பாலன்நல்சாமி கொண்டாடித்தினம்பணிந்தேன்

பந்தம் அகற்றுபல
வந்தஞ் செய்யாதேபிர்மா
னந்தம் அருளியெனைச்
சொந்த வடிமையாக்கு கந்

இன்னும் பராமுகமாக இருப்பது என்றமெட்டில்
வேறு வர்னமெட்டு.

கண்ணிகள்.

41. இன்னும்வர்மஞ்செய்வ தாகாதுஆகாது
ஏற்குமோ ஆறுமுகா-இந்த
ஏழைமீதிற்கடைக் கண்வைத்துகார்க்க
இதுசமயஞ் சண்முகா

தென்னராஞ்சூரரைச் சின்னபின்னஞ்செய்த
சேவற்கொடியோனே குறப்பாவைதினைமாவைத்தர

ஆவலுடன் வாங்கியுண்ட
நாவலரா னந்தங்கொண்ட

அப்பனே பழனிமலை
யப்பனே பணிந்தேனுனே இன்

நானும்பிறந்த நாள்முதலின்னுள்வரை
நல்லசந்தோஷ மில்லை-காற்றை
நாடியபஞ்சுபோ லோடித்திரிவதை
நாதாகண் பார்க்கவில்லை

வீணுய்ப்பலபல யோசனைகள் கொண்டேன்சாமி
வித்தகனே அற்புதநற் சித்தமதுவைத்தெனையாள்

வேலாசுசீலா மறை
மூலா பார்வதிபாலா

வேணுந்திருவருளே நிதங்
காணும்படி யருளே பதம் இன்

அத்வீதவாழ்க்கையில் ஆனந்தச்சேர்க்கையில்
அடியேனுஞ் சேரவேணும்-திரு
ஆறுமுகப்பொருளா மூனைத்தினல்
அப்போதே முத்திதோணும்

சாத்மீகம்வாய்ந்த தயாபரனேயுனைத்
தானேதொழுதேனுனே சேனுபதியே கோனே

தஞ்சமென்றேன் அஞ்சலருள்
கெஞ்சிநின்றேன் சஞ்சலந்தீர்

தாமதஞ்செய்யாமலரி
மால்மருகனே கண்பாரீர் இன்

உப்பும்புளிமிளகாய் மல்லிஅன்னம்
உதவியென்றேன் நானே-அது

தப்புஎன்றிப்போதே ஒப்புக்கொள்வேனப்பா
சண்முகானந்த வேலோனே
இப்பிறவிதப்பினு லெப்பிறவிவந்
தெய்துமோஅறிகிலேனே தேவாதெரிகிலனே

தெரிசனமும் பரசுகமுந்
தரவுருவாய் திருமுருகா

தேவனே பணியும்நல்ல
சாமிக்கருளேதுஞ் சொல்லா இன்

---

## சுப்ரமணியன் பொற்பதம்பணி கீர்த்தனம்.

இராகம்-தோடி, தாளம்-ஆதி.

கண்ணிகள்.

42. தென்பழனிவாழுஞ் சுப்பய்யா-ஸ்ரீமீனம்பிகா
தேவிபெற்ற குமாரவேலேயா
வம்புசெய்திடாதே சாமி
வருத்தம்வையாதே நேமீ
கும்பிட்டேனே யானும்வாமி
கோடிபுண்யமெனை நாடிவந்தாளுவாய்
கோகிலவள்ளியின் நாயகலோலனே தென்

போதும்போதும் வர்மஞ்செய்யாதே
புகழ்ஷண்முக
புண்ணியனே வாதுபொல்லாதே
ஏதுபிழை செய்தேனையா
ஏழையைக் கண்பார்துய்யா
சாதகஞ்செய் முருகையா
சாந்தகுணத்தவாளன் தெய்வானையின்
காந்தனெனுமயிலேறு சிங்காரனே தென்

தஞ்சமென்றே னஞ்சேலென்றுள்வாய்
உனதடிமை
கெஞ்சினின்றே னென்வினைகொய்வாய்
பஞ்சவர்க்கு தூதுசென்ற
பாரளந்த மாயனென்ற

கொஞ்சிஆயர் வெண்ணெயுண்ட
கோசலைபெற்ற குமாரனெனுமரி
வாசவனின்விசு வாசமருகனே (தென்)

ஆனந்தசாகர மானவா
அகிலமீதில்
அண்டசராசர மானவா

ஏனிந்தத் தாமதமோ
எந்தன்மீதினிற் கோபமோ

என்னன்னைவள்ளி சோபமோ
ஏதுந்தெரிகிலேன் சூதுமறிகிலேன்
பாதம்பணிநல்ல சாமிக்கருளுவாய் (தென்)

---

இராகம்-இந்துஸ்தான்தோடி, தாளம்-ஏகம்.

பல்லவி.

43. தேவர்துயர்தீர்த்தவா திருப்பரங்குன்று
குன்று குன்று குன்று

அநுபல்லவி.

தேனுந்தினை மாவுந்தரும்
மானொடு மயிலமரும்
கோனேகுழந்தைகுறை தீர்ப்பதுமென்றோ
என்றோ என்றோ என்றோ (தேவர்)

சரணங்கள்.

எண்ணாத எண்ணமெல்லாம்
எண்ணியெண்ணி யெந்தனுள்ளம்
புண்ணாகச்செய்ததினிப் போதுமேகுகா
குகா குகா குகா தேவர்

கோடானுகோடி எண்ணம்
குவிந்தவிப்பாலன் மனம்
வாடாமற்செய்வதற்கு வாவடிவேலா
வேலா வேலா வேலா தேவர்

கல்லோ இரும்போ மனம்
காக்கத்தடையே யின்னம்
நல்லசாமியுன்பாதம் நாடினேன்தினம்
தினம் தினம் தினம் தேவர்

---

மீனாக்ஷிரமணா என்ற வர்னமெட்டு

பல்லவி.

44. தெய்வானை ரமணா
தேவசுகுணா - வள்ளி தெய்

அநுபல்லவி.

வையகந்தனில் நானே
மையலாற் கெடலானேன்
ஐயாசிறியே னுய்யும்வரம்
வையாபுரிமுருகையா தாரும் தெய்

சரணங்கள்.

பந்தபசமெனும் பேய்த்
தொந்தவாசை யினுமே
சொந்தமாக்குது இந்தவேளை
வந்துநீக்குவாய் கந்தவேளே தெய்

பிரணவந்தனைப் பிதா
அரனுக்குரைத்த நீதா
சரணமறவேன் அரியின்மருகா
தருணமிதுவே கருணைபுரிவாய் தெய்

சேவலா உனையே
ஆவலாய்ப் பணிவேன்
தேவர்கள்பணியும் மாமயிலாதினம்
பாவந்தீர்நல்ல சாமியைக்கார்முனம் தெய்

---

மாமதுரை யாளுஞ்சுந்தரா என்ற வர்னமெட்டு

பல்லவி.

45. சோமசுந்தர னீன்றபாலனே
சொந்தமுட னெனையாளுஞ்சீலனே சோம

அநுபல்லவி.

நாமந்தனையே அனுதினம்
நந்தினேன் பத்தியாய்—கர்த்தனே இத்ததி சோம

தொகையரு.

நானிலவாஞ்சை
நான்கொண்டேன் பஞ்சை

பாட்டு.

நாயேன்றுயர்தீருங்கந்த
நாதனேநீதனே வாதேதனேமாமதுரைச் சோம

தொகையரு.

மாதர்கள்மோகம்
வாதையனேகம்

பாட்டு.

விரும்பும்நல்ல சாமிக்குவந்
தருள்வாய்வர மருளும்மீனக்ஷி சோம

---

தேன்பாங்கு என்ற வர்ணமெட்டு

46. வேலவா உனைப்பணியும்
பாலனென்மேற் கோபமென்ன
நீலமயி லேறிவந்து
ஆள்வதுன்றன் பாரமையா

வையாபுரிமீதாய்
வளருங்கந்தநாதா வேல

ஏழையெனைப் பாராமுகம்
ஏற்குமோபொன் னறுமுகம்

வாழ்வதுகொடுக்க நீதம்
வருவாய்சண் முகநாதம்
　ஏனோஎன்மேல் வாது
　இனிச்செய்ய லாகாது　　வேல

வீரசூர சம்மாரா
விஞ்சையை யுரைத்ததீரா
ஏறிமயி லேறிவிளை
யாடுங்குக ªனரில்வாராய்
　வேண்டினே னின்பாதம்
　எனையாண்டரு ளேன்வாதம்　　வேல

கோலமயி லேறுசூர
குஞ்சரிமண வாளனே
பாலனும் நல்லசாமி
பாடித்தொழு தேனனே
　கோரும்வரந் தாரும்-திருக்
　குமரனேசண் பாரும்　　வேல

தையல்குற வள்ளியின்மேல்
மையல்கொண் டிருதோளின்மேல்
கைவளையல் தூக்கிவந்த
கட்டழக சண்முகனே
　செய்யுந்தவ யோகா-மாது
　தெய்வானை பாகா　　வேல

## சண்முகானந்தன் துதி கீர்த்தனம்.

இராகம்-தேசிகதோடி, தாளம்-ஆதி.

பல்லவி.

47. ஸ்வாமி - சண்முக நாதா
ஸ்வாமி - பரமானந்தா ஸ்வாமி

அநுபல்லவி.

சரணமறவேன் முருகானந்த
கருணைபுரியும் அருள்நிறைந்த ஸ்வாமி

சரணங்கள்.

தாமதமேனோ கந்த
சாமியுனது சொந்தத்
தாசன்பணிந்தேனே சந்ததமுந்தனை
பாசபந்தந்துட் படுத்தாதேஎந்தனை ஸ்வாமி

தொகையறு.

கேவலமான இப் பூலோகவாஞ்சையில்
ஆவலாய்நான் றிரிந்தேன்
சேவலனுனவே லாயுதாநின்னருள்
சீக்கிரம் அருளுகந்தே

பாட்டு.

சாமிவேலையா நல்ல
சாமிபாமாலை சொல்ல
சமரசாசன் மார்க்கமருளும்
அமரர்போற்றுங் குமராநாளும் ஸ்வாமி

## திருக்கடையூர்தனிலே என்ற வர்னமெட்டு.

### கண்ணிகள்.

48. சாமி செந்தில்வாசனே-உனைத்
தான்பணிந்தே னீசனே
சாலோகசாமீப சாரூபசாயுச்யம்
தாவள்ளி நன்னேசனே சாமி

ஞானச் சுடர்மணியே-குக
நாதகுரு மணியே
நாடிஉனைத்தேடி ஓடிவந்தேனருள்
நல்கும் நவமணியே சாமி

தீபச்சுட ரொளியே-தெய்
வீகத்திரு வொளியே
தீர்த்தருள்சங்கடம் கார்த்திகேயாததி
தேவா வரமளியே சாமி

தெய்வமுனைப்போ லுண்டோ-தே
டியும்வராது நன்றோ
தேவாநல்லசாமி ஆவலாய்ப்பாடித்
தெரிசிக்க வாரதென்றோ சாமி

---

## பியோஹாவணு என்ற வர்னமெட்டு

### கண்ணிகள்.

49. வடிவேலனே அடிமைக்கருள்செய்யும்
உமைபாலனே வடி

வேலா அசுரர்களின் காலாஉனையேவெகு
நாளாய் துதிக்குமெனை
யாளாய் அண்டர்கள்பணி வேல

மயில்-வாகனு குற
வஞ்சிவள்ளிக் கிசைந்தமோகனு மயில்

வானோர் துயரகற்றும்
சேனுபதியே முற்றும்
நானே தினமும் நத்தி
னேனே நலமருளும் வேல

திரு முருகனே முகில்
வண்ணன் அகமகிழும் மருகனே திரு

முருகாதென் பழனியில்
குருவாய் விளங்குகின்ற
மூர்த்தி பார்க்கப்பரம
நேர்த்திகீர்த்தி மிகுந்த வேல

கண் காக்ஷியே உந்தன்
காலில்பூசைபுரியு மாக்ஷியே கண்

ஆக்ஷிமீனுக்ஷி கா
மாக்ஷி பெற்றயோகா
தாச்சியில்லாமல் நல்ல
சாமிக்கருள் கடாக்ஷி வேல

லாவணி வர்னமெட்டு

கண்ணிகள்.

50. பம்பம்பமெனத்தினஞ் சங்கநாதமொலிக்குந்
தென்பழனி முருகையா-அன்பர்தமக்கு
இன்பந்தா பன்னிருகையா
நம்பினஅடியவர் துன்பந்தீர்த்திடும்
கும்பமுனிக்குப தேசமொழிந்திடும்
தென்பழனி முருகையா

தேவடியாள்காலடியே சேவடியென்றனுதினம்
செப்பும் கசடனெனையே-மருளை நீக்கி
அப்பாநீ ஆளுவையே
நாவலர்போற்றும் ஞானச்சுடர்மணி
தேவனேயாவரும் ஆவலுடன்பணி
தென்பழனி முருகையா

கந்தா கடவுளரின் மைந்தா கானக்குறத்தி
சொந்தா தயவு வல்லையா-உனதுசொந்த
மைந்தனென்று நானில்லையா
சிந்தையும்நொந்து வருந்துவதோநற்
சிந்தையுடன்வந் தெந்தனையாள்வீர்
தென்பழனி முருகையா

சாமிசாமியென்றுநான் பூமியிலுன்புகழைச்
சாற்றித்திரிந்தே னையனே-தினந்தினமும்
போற்றிப்பணிந்தே னையனே

58972

தாமதமேனினித் தயவுசெய்வாய்நல்ல
சாமிபணிந்தனன் மாமயிலாவல்ல
தென்பழனி முருகையா

---

## இந்துஸ்தான் வாத்திய மெட்டு

இராகம்-தேசிகதோடி, தாளம்-ஏகம்.

பல்லவி.

51. மயிலேறும் வேலா—நீல
மயிலேறும் வேலா

அநுபல்லவி.

உந்தன் மைந்தனெந்தனை யாளாய் நீல

சரணங்கள்.

குயிலணங்கெனும் ஒயில்நடைவள்ளி
குஞ்சரிமகிழ் நேசா
கும்பமுனிக் கருளுபதேசா
வனக் குறத்தியாசையா லெனைத்துரத்தினால்
விடுவேனோ உனைலேசா நீல

ஆவலாய்நாவலர் பாவலர்யாவரும்
அண்டிப்பணிந்தாரே முன்னே
அந்த ஆசைவைத்தாகிலும் என்னை
அற்ப ஆசைகளைக்கண்டு மோசம்போகாமலே
ஆட்கொள்ளுவா யெந்தன்கண்ணே நீல

பத்திமிகுந்து மகிழ்ந்துபுகழ்ந்துனைப்
பாடினுலுண்டாமே யோகம்
பரி சுத்தவைராக்ய தியாகம்
திருச் சத்துசித்தானந்த சாயுச்யனேநல்ல
சாமிக்கருள் நல்விவேகம் நீல

---

இராகம்-அமீர்கல்யாணி, தாளம்-ஆதி.

பல்லவி.

52. கந்தாகுமரா சண்முகஅவதாரா கந்

அநுபல்லவி.

காவடிகோடியுன் சேவடிநாடினின்
ருடியாடிப்பதந் தேடிவருகுதென் கந்

சரணம்.

மந்தமாருதம் வீசும்
சொந்தப் பரங்குன்றேசா
சிந்தைநொந்தேனே இந்தவேளைவந்
தெந்தனுக்கருள் செந்தில்வாழுமென் கந்

தொகையரு.

மயிலேறியனுதினங் குயிலெனும்வள்ளியுடன்
வந்துரக்ஷிக்கவேணும்
மாமலர்தன்னிலே நேமமாய்ப்பணிபவர்
மருள்நீக்கி முத்திதோணும்

பாட்டு.

படிக்கருள் செய்யுகந்தே
பக்தருக் கோடிவந்தே
பாலன்நல்லசாமி பாடிவந்தேன்றிரு
மால்மருகாதெய்வ யானைமகிழ்திருக் கந்

---

ஆண்டிபண்டாரம் என்ற வர்னமேட்டு.

பல்லவி.

53. ஆண்டியின் மகனே—எனை
ஆண்டருள் குகனே-சிவ ஆண்

அநுபல்லவி.

ஆண்டருள்வேலவனே அண்டினேன்பாலகனே
பாண்டியமருகனான தாண்டவம்புரியுமெங்கள் ஆண்

சரணங்கள்.

மானைத்துரத்திவள்ளி மானைமணக்கச்சொல்லி
யானையிடத்திற்றள்ளி னேனேதினந்துதிகொள் ஆண்

பெரியோர்கள் சேர்க்கையிலே
பேரின்ப வாழ்க்கையிலே
திரியாமல் நானலைந்தேன்
தேவனே கண்பாரிவ்வேளை ஆண்

நல்லசாமி தமிழைச்
சொல்லிப் பணியுமேழை
தொல்லைதனைத் தீர்த்தாளே
சொக்கனீன்ற கந்தவேளே ஆண்

---

வந்தவேளையிது நல்லவேளை என்ற வர்னமெட்டு.

கண்ணிகள்.

54. தேடியுனையாடி நாடிவந்தேன்கமழ்
தென்பழனிமலை யாண்டவனே-மனம்
வாடிவருமெனக் கோடிவந்துவரந்
தந்தருள்தாவடம் பூண்டவனே தேடி

வேசைகளைவிசு வாசமாய்நம்பினன்
மோசமானேனையா கந்தவேளே-வலை
வீசியெனைமாய்த்த தாசிகள்பாசத்தை
நாசமாக்கியாள்வா யிந்தவேளை தேடி

சொந்தஞ்சொந்தமென்று பந்தபாசங்களை
சிந்தையில்வைத்து நொந்தேனேநாளாய்-நாளுந்
கந்தம்புனுகு சவ்வாதபிஷேகனே
சந்ததமுந்தொழு வேனேவேலா தேடி

வல்லவனென்றுனைச் சொல்லித்திரியுமென்
தொல்லையைத்தீர்த்தருள் மால்மருகா-பாலன்
நல்லசாமிதமி ழல்லும்பகலும்ப
டித்தேனெனைக்கார் சண்முகாகுகா. தேடி

---

அம்பிகா உன்மகன் குகன் என்ற வர்னமெட்டு.

பல்லவி.

55. சண்பகவல்லி யுன்மகன்
வம்பனும் செல்வச்சண்முகன் சண்

அநுபல்லவி.

நம்பிவனமே யடைந்தான்
நங்கைவள்ளி யைத்தொடர்ந்தான்
கும்பிட்டதை யும்மறந்தான்
கோபங் கொள்வ தாமா சொல்லம்மா சண்

சரணங்கள்.

பண்டாரக் கிழவனடி
பசியுமிக வாகுதடி
சென்றுவிடும் ஆவியடி
தேனே வள்ளி மானே யென்றனன் சண்

வேசமாறி வேசம்போட்டான்
வேசையர்மே லாசைப்பட்டான்
காசில்லாமற் கடனும்பட்டான்
கந்தன் ஞாயம் இந்த மாயமா சண்

அப்பனோர் ஆட்டிடையன்
அம்மானும் மாட்டிடையன்
அன்பர்மே லின்புடையோன்
ஆடுமயிலேறுங் கொடையன் சண்

அம்பலத் தாடுமீசன்
அன்றருளிய நேசன்
நம்புநல்ல சாமிதாசன்
நாடிக் கூடித் தேடிப் பாடிய சண்

---

தயவுசெய்தாள்வாய் வேலா என்ற வர்னமெட்டு.

கண்ணிகள்.

56. பாடிவந்தேனே வேலையா
பழனி மெய்யா பாடி

கோடிகும்பிடு ஐயா
குழந்தை சுப்பிரமண்யா
வாடிடாதே யென்றொரு
வாக்களித்தாற்பெரும் பாக்கியமையா பாடி

மனத்துள்ளி னிக்கும்பொருளே
மதி யருளே மன

வனத்தினில் வேடனுகை
தினைப்புனந் தனிலேக
மான்வள்ளி கோபமாக
வசைமொழிய இனிய
இசையென மருவிய மன

கல்லோ இரும்போ உன்மனம்
கரையா தின்னம் கல்

எல்லாப் பிழையும்பொறுத்
தென்னையாள் வாய்சர்க்குரு
நல்லசாமி யுன்றிரு
நாமமதைத்துதித் தேபலதோத்திரம்
பாடிவந்தேனே வேலையா

---

சடைமறைத்து மகுடம்வைத்த என்ற வர்னமெட்டு.

கண்ணிகள்.

57. தினைப்புனத்தில் கவணெரிந்த வள்ளிநாதா
வள்ளிநாதா-வள்ளிநாதா-எந்தன்
மனத்தினிலோரன்பு மொழிசொல்லொணுதா; தினை

முடுகு.

சாண்வயிர்தன் கொடுமைக்கிடர்
ஏன்வைத்தா யப்பனேஎன்மிடி
தனைவெருட்டித் துணைபுரிவாய் வெற்றிவேலா
வெற்றிவேலா-வெற்றிவேலா-மலர்
மணங்கமழ்கருணைக்கண் ணுமைபெற்றபாலா தினை
பங்கமில்லாச்சிங்கார வேற்றுங்கும்வாகா
தாங்கும்வாகா-தாங்கும்வாகா-திங்கள்
கங்காதரன்பெற்ற கண்மணியேயோகா தினை

முடுகு.

சாங்கியேநடமிடு மயின்மிசை
பாங்குடனே ஞானதிசை

தந்திடுகிருபை வைத்துச்சாமிநாதா
சாமிநாதா-சாமிநாதா-நல்ல
சாமிபதமேபடித்தும் இன்னும்வாதா திணை

---

சேந்தாழம்பூவின் தேன்கமழும் என்ற வர்னமெட்டு.

கண்ணிகள்.

58. தந்தாளுன்பதஞ் செந்தூரில்வளர்
சாமியேகந்த சாமியே
சிந்தாகுலந்தவிர்க்கச்
சிகியின்மேல்வாசிறக்க
சிரித்துமுப்புர மெரித்தஅரனுக்
குரைத்தசண்முக குரத்திகணவ தந்

அந்தோநொந்தேன் வந்தாளெந்தனை
அரகராகுக குருபரா
தண்டாமரைப்பதமே
தருவாய்நீயேசதமே
சண்டனெனதுயிர் கொண்டுபோகாமலே
தண்டைசிலம்பொடு அண்டையில்வருமே தந்

அத்தாசித்தா நித்தாமுத்தாவே
ஐயனேமலர்க் கையனே
நித்தம்பணியும்நேமி
பத்தனும் நல்லசாமிக்
கித்தருணத்தினிற் சித்தமிரங்கியே
தத்திநடமிடு சித்ரமயிலில்வா தந்

---

பழனிபுரிகிரியி லுரையுங்குரு என்ற வர்னமெட்டு.

பல்லவி.

59. ஆலோலக்கான வள்ளிமண
வாளசண்முகனேவா-மயிலின்மிசை ஆலோ

அநுபல்லவி.

மேலாம்பதந்தர அருகனேசர
வணபவனே தேவா-மயிலின்மிசை ஆலோ

சரணம்.

காலன்வந்தென்னை யணுகாமலே
காக்கவேலவனே வா
மாலின்மருகா தெய்வயானையின்
மனமகிழ்ந்த கணவா
பாலன்நல்ல சாமிதினமனதில்
பணியணிதவயோகா தியாகா ஆலோ

---

இராகம்-தோடி, தாளம்-ஆதி.

பல்லவி.

60. வேலனையே துதிமனமே-நாளும்
காலன்வந்தணுகாமல் காப்பான்தினமே வேல

அநுபல்லவி.

மால்மருமகனும்வை யாபுரிவாழ்கந்தன்
பாலனும்நல்லசாமி பணிந்துதுதிக்குஞ்சொந்தன்

சரணங்கள்.

ஆலமுண்டதிரு நீலகண்டன்மகன்
ஆகூலம்தீர்த்திடும் ஆறுமாமுகன்
ஞாலமதிலேகுக நாதசண்முகன்
ஞானசுப்ரமண்ய னுனமயில்வாகன் வேல

சத்தியருள்சர ஹணபவசுந்தரம்
சகலலோகத்தினு மேகநிரந்தரம்
நத்திடும்பக்தர்க்கு முத்திவரந்தரும்
சுத்தசைதன்யவாழ் வானசுகமருளும் வேல

கானக்குரவஞ்சி வள்ளியின்மோகன்
கன்னிதெய்வானை மகிழும்விவேகன்
மோனமுனிவர் தினம்பணியோகன்
மோக்ஷமளித்தர்க்கத் தாக்ஷியானகுக வேல

---

## புதிய இந்துஸ்தான் வர்னமெட்டு.

இராகம்-இந்துஸ்தான்பியாக்-தாளம்-ஏகம்.

61, நான்-ஆருமற்றப் பாவியெந்தாய்
வேறுகெதி யில்லைகந்தா
ஆதரிப்பாய்-எந்தனை-ஆதரிப்பாய் நான்

தொகையரு.

வேறுகெதி யில்லையே
ஆரெனக்குச் சொல்வாயே

பாட்டு.

கூறுவாய் வேலா-கடைக்கண்
பாருமா சீலா-அருள்செய்
தேவியின் பாலா-நான் ஆரு

தொகையறு.

பந்தபாசத் தொல்லையே
பற்றிக்கொண்ட சள்ளையே

பாட்டு.

சாமி வாடினேன்-உனைத்
தேடி ஓடினேன்-நல்ல
சாமி பாடினேன்-நான் ஆரு

---

## அறுமுகப்பெருமான் துதி கீர்த்தனம்.

இராகம்-இந்துஸ்தான் தோடி, தாளம்-ஆதி.

கண்ணிகள்.

62. அறுமுகப்பொருளே அண்டினேனருளே
ஐயோபூலோக மாய்கைபொல்லாதே-நின்
அடிமையைக்கார்க்கத் தடைசொல்லாதே அறு

பார்வதிபாலனே பழனிவாழ்வேலனே
பாதம்பணிந்தே னுந்தனடியானே-திருப்
பக்தரையாளுஞ் சேவற்கொடியானே அறு

மோனத்தின்வடிவே முத்தியின்முடிவே
ஞானந்தருஞ்சண்முக நாதகந்தா-வன
மீதிருந்தகுற மாதுசொந்தா அறு

சித்தவிலாசனே தெய்வானைநேசனே
பக்தனும்நல்லவாமி பாடினேனே-திருச்
சித்தம்வைத்தா ளாவினங்குடியானே அறு

---

காக்ஷிகண்காக்ஷியே என்ற வர்னமெட்டு.

பல்லவி.

63. காக்ஷிகண் காக்ஷியே
கந்தன்முக வீந்தாரக் காக்ஷி

அநுபல்லவி.

ஆக்ஷியுமை பாலன்திரு
வாக்ஷியி லமர்ந்ததிருக் காக்ஷி

சரணங்கள்.

சூட்சமமொழிபுகலுஞ் சுந்தரவேற்சிங்கமே
தொல்லைதீரப்பக்தர்கள் கொண்டாடுஞ்சொக்கத்தங்கமே
மாட்சிமையுடன்விளங்கும் மந்திரமாயெங்குமே
வானவருந்தானவரும் போற்றிடத்துலங்குமே

வந்தருள்தந்திடுங் கதிரேசன்

அன்பர்-தந்தைதாய் குருவாய்வரும்வாசன்
குறச்-செந்தினைப்புனத்து வள்ளிநேசன்
கொடும்-பந்தவினை வேரறுக்கும்நாசன்

பரிமளவிலாசன்
பழனிமுருகேசன்
அரனுக்குபதேசன்
அழகுமந்தகாசன் - விளங்கும் காக்ஷி

சென்றுநின்றபக்தர்சங்கம் சிந்துபுகழ்பாடுமே
தெய்வானைபாகன்பதந் தினமுமனம்நாடுமே
கண்டவர்விண்டிடாத்தூரி யாதீதத்தைத்தேடுமே
காத்திருந்துநத்திடின்ஞானக் கைவல்யங்கூடுமே
கண்ணன்மருகன் விளங்கும்நேர்த்தி
அவன்-கண்ணினல் நோக்கிடிற்றவம்பூர்த்தி
துதி-பண்ணினல்நமக் குண்டாமேகீர்த்தி
மன-தெண்ணினல் கிடைக்கும்பரச்சீர்த்தி
தேடுசிவகாமி
தேவியருள்வாமி
பாலன்நல்லசாமி
பணிபழனிச்சாமி-காணக் காக்ஷி

---

## மெஞ்ஞான வேலனுக்கு விஞ்ஞாபனம்
## பூலோமாய்கையிலே என்ற வர்னமெட்டு

கண்ணிகள்.

64. தேரோடும் வீதியெல்லாம்
ஊடாடி யேதிரிந்து
சேட்டையு மேபுரிந்து

கோட்டமிட் டேசினந்து
தினமலைவேனே நாயெனஅலைவேனே
தேடிவன மோடிவள்ளி
மானைமணஞ் செய்தவனே தேரோ

கைவளைதான் மினுக்கி
மெய்தனையே குலுக்கி
கண்ணைமருட்டி நோக்கி
எண்ணஞ் சிதரத்தாக்கி
காதல்பேசிடும் பெண்
காதலே கெடும்-படி
கருணைவைத்து நல்லசாமிக்
கிதுதருண மருள்வாய்நேமி தேரோ

---

அருட்கடல் ஞானனந்தம் என்ற வர்னமெட்டு.

பல்லவி.

65. குறக்கொடிவள்ளிமகிழ் நாதனே-குகாகுமர
குருபரசண்முக விநோதனே குறக்

அநுபல்லவி.

திருமொழிவாயனே தேவர்சகாயனே
சேவற்கொடி விளங்குந் தூயனேஸ்ரீ
சீதாபிரான்மகிழ்
தீராஅன்பர்புகழ்

தெய்வானையின் னேயனேபூங்கமழ்
சென்றபோர் அன்று சூர்வென்றோனேநீதி
ஜீவகாருண்ய ஜோதி குறக்

சரணம்.

செழுங்கருணைக்கடல் செந்தாழம்பூமடல்
தேனேசேயனைப் பிறவிக்கடல்-ஒடித்
தேடி வருகுதே
சாடியதைவதை
செய்தேகண்ணால் நோக்கிடாயுய்திட
தேவையுன்சேவை தருகுவாயேநேர்
சீடன்நல்ல சாமிசரிக்கிகூர் குறக்

---

சீதாபிரமணு ஸ்ரீரமணு என்ற வர்னமெட்டு

பல்லவி.

66. செந்தூரன் தெரிசனம்
சென்ம விமோசனம் செந்

அநுபல்லவி.

சிந்தூர பார்வதி
சிந்தைமகி ழுங்கதி
ரேசன்பரங்கிரி வாசன்குறத்திநன்
னேசமிகுந்தம ணாளனுல்லாசன் செந்

சரணங்கள்.

ராஜாங்க யோகமே
நாளுந் தியாகமே
நாடிடும்பக்தர்கட் கீய்ந்திடுங்குகவேள்
தேடிடுமன்பர்கள் துயரகன்றிடுமே — செந்

எல்லாம் வல்லபசித்தன்
இகபரஞான முத்தன்
ஈசனருள்கும ரேசன்பணிந்திடுந்
தாசனெனும்நல்ல சாமிக்குகந்திடும் — செந்

---

மயிலேவடி வேலனேடேதிர்வாவா என்ற வர்னமேட்டு

பல்லவி.

67. மகாஒய்யார மாமயிலேறுஞ்சிங்காரா
வந்தாள்குமரா — மகா

அநுபல்லவி.

வாவள்ளிநேசா மங்கையுல்லாசா
மனமெலிந்துவாடினே னெனைக்கார்ப்பாய் — மகா

சரணங்கள்.

தேவாதிதேவா தெய்வானைமோகா
சிறியேன்மீது சேவலாகருணைசெய்வாய் மகா

பாலகுருவே பக்தர் திருவே
பவானியுமை பார்வதிதந்தபாலா மகா

ஆறுமுகனே அரிமருகனே
அருள்வாய்நல்ல சாமியும்பணிந்தேனே மகா

---

இராகம்-செஞ்சுருட்டி, தாளம்-ஆதி.

பல்லவி.

68. குன்றக்குடி குமரவேலாண்டி-தினநினைந்து
கும்பிட்டேனே நானுனைவேண்டி-மனங்கனிந்து குன்

அநுபல்லவி.

அன்றமரர்க் காய்ப்போர்முனை
சென்றுசூரை வென்றவனே குன்

சரணங்கள்.

நம்பினே னுன்னடியே
ஞானச்சுடர் மணியே
அம்பிகைபெற்ற சேயனே
அரிமருக தூயனே குன்

அன்பாய்ப் பணியும்பக்தர்க்
கின்பமருளுஞ் சித்தா
அடியவருட னென்னாளும்
வடிவேலுடனே வந்தாளும் குன்

சஞ்சலத்தா லுழன்றேன்
நெஞ்சிற்கவலை கொண்டேன்
வஞ்சனைப்ர பஞ்சமீதிற்
கொஞ்சமுஞ் சந்தோசமில்லை குன்

பாலன்நல்ல சாமியும்
பாடித்தினம் பணியும்
கோலவள்ளி மாதுடனே
நீலமயிலேறி வாரும் குன்

---

## ஸ்ரீராமவாசுதேவ பஜனை கீர்த்தனை.

### இஸ்கேபேகல்மே ஓமைனு என்ற வர்னமெட்டு.

பல்லவி.

69. வாசு-தேவனே மாயவனே வாமா
ஆதி-சேஷசயன ஜெயராமா வாசு

அநுபல்லவி.

சேயனுனுய்திட சீதாதேவியுட
னேசேவைதந்திட வேணுமே வாசு

சரணங்கள்.

கோதண்டவீரனே கோசலைகுமாரனே
கோதில்லாத்தீரனே கோவிந்தனே வாசு
கல்லைப்பெண்ணுக்கிய வல்லவனேதினம்
நல்லசாமிபணி செல்வமணி வாசு

---

## நல்லசாமிதாஸ் இயற்றிய

### மங்கள வாழ்த்து.

நீநாம ரூபமுலகு என்ற வர்னமெட்டு.

பல்லவி.

70. தேவாதிதேவனுந் திருச்சேவை
பெற்றிட மங்களம் தேவா

அநுபல்லவி.

தேவர்சே னாதிபதியான்
தென்பரங் குன்றப்பதியான் தேவா

சரணம்.

மூவர்மகிழும்வேலன் நாவலர்தொழும்பாலன்
சேவடிதேடியேநல்ல சாமிபுகழுஞ்சீலன் தேவா

---

### மகாத்மா காந்திபேரில் கீர்த்தனை.

பாண்டியனீன்ற மீனாக்ஷி என்றமெட்டு.

பல்லவி.

71. ஸ்ரீஜெய-காந்தியுபதேசம்-இந்தியாவிற்
காணவிசுவாசம்
மகாத்மா-சாந்தகுணவாசன்-புரிபிர
சங்கஞ்சந்தோஷம்-கேட்போர்க்குப்
பொங்குஞ்சந்தோஷம் ஸ்ரீஜெய

தொகையறு.

அயர்ச்சித்தனமெனு மிடியைத்துரத்திமுரி
யடிக்கும்விவேக மூர்த்தி
முயற்சியாய்வேலையை வாய்ச்சொல்லில்
நில்லாதுமுடிக்கப் பணித்தசீர்த்தி

பாட்டு.

சுதேச-சேவைசெய்தீரர் சாத்வீக
ஜெயபால வீரர் ஸ்ரீஜெய

தொகையறு.

புத்தியெனும்அறியமா சத்தியைஎழுப்பிப்
புதுஉளக்க மீயுதாரன்
புகல்கின்றவேதவாக் யம்போல்நடந்தாலிப்
போதேகு மந்தகாரம்

பாட்டு.

மங்கள-நாமசுப யோகன்-நல்லசா
மீ பணிவாகன் ஸ்ரீஜெய

சுபம். சுபம். சுபம்.

முற்றிற்று.

வெளிவந்து விட்டது! வெளிவந்து விட்டது!!

அருமையான சங்கீத புத்தகம்!

புதிய முறையில் எழுதப்பட்டது!

கீர்த்தனங்களை மூப்பதே தினத்தில்

உபாத்தியாயரில்லாமல் சுலபமாய் ஆர்மோனியத்தில்

வாசிக்கவும், பாடவும் கற்பிக்கும்

# ஆர்மோனியபோதன சங்கீத ரத்னம்

## விலை ரூபா ஒன்று (ரூ 1—0—0)

ஆர்மோனியம் வாசிக்கவும், பாடவும் கற்றுக்கொள்ள நூற்றுக்கணக்கான ரூபாய்ச் செலவை நிறுத்திவிடுங்கள் ஒரேகையினல் ஆர்மோனியம் வாசிக்கும் முறையையும், இரண்டு கைகளால் வாசிக்கும் முறையையும், சுலபமாய்க் கற்றுக்கொள்ள அனேகபடங்கள் மூலமாய் காண்பித்திருப்பதுடன், சரளிவரிசைமுதல் கீதம், வர்னம், கீர்த்தனங்கள், தேவாரம், திருப்புகழ், காவடிச்சிந்து, இங்கிலீஷ் நோட்டு முதலானவைகளை இப்புத்தகமூலம் யாவருடைய உதவியில்லாமல் 30-தினத்தில் வாசிக்கவும் பாடவும் சுலபமாகக் காண்பித்திருக்கிறது.

இன்றே ஒருபுஸ்தகம் தருவித்து அதன்பலனை யடைந்து ஆனந்திக்கக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

---

விலாஸம்:—

ஸ்ரீ காமாக்ஷி விலாஸ் புக் டிபோ,

வேப்பேரி போஸ்டு - மதராஸ்.